## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் உள்நாட்டு இறைவரி ஊக்குவிப்பு நிதியத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவினக் கணக்குகள், உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் நிதியத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் மன்றம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மன்றத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிதியம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிதியத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக மன்றத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது

அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிதியத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| குறித்த நியமங்களுடனான தொடர்புடன் கூடிய இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 01 இன் 95 இலக்க பிரிவின் கீழ் நிறுவனத்தின் பங்குகள் மூலதனமல்லாத போது நிதி நிலைமைக் கூற்றின் முகப்பில் குறிப்பாக திரண்ட மிகை மற்றும் பற்றாக்குறையை காண்பிக்க வேண்டியதுடன் கணக்கீட்டு கொள்கை மற்றும் பிழை திருத்தங்களில் மேற்கொள்ளப்படும் மொத்த சீராக்கங்கள் தேறிய சொத்து மாற்றல் கூற்றில் ஒவ்வொறு ஆக்கக் கூருகளிலும் வெவ்வேறாக வெளிப்படுத்தப்பட வேண்டும். நிதியத்தின் தேறிய சொத்துக்கள் மாற்றல் கூற்றினுள் 2019 மற்றும் 2021 ஆண்டிற்காக சீராக்கங்கள் மேற்கொண்டிருந்த போதும் ரூபா 22,801,109 ஆன சீராக்கங்கள் நிதி நிலைமைக் கூற்று முகப்பில் திரண்ட நிதியத்தின் ஆரம்ப மீதிக்கு சீராக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் தேறிய சொத்துக்கள் மாற்றல் கூற்றில் 2022 சனவரி 01 திகதியன்று திரண்ட நிதியத்தின் ஆரம்ப | கணக்காய்வு ஐயவினாவில் சுட்டிக் காட்டியுள்ளவாறு எதிர்வரும் ஆண்டில் நிதிக்கூற்றுக்களில் இந் நிலைமையை சீராக்குவதுடன் தொடர்பான அலுவலர்களுக்கு ஆலோசனை வழங்கியதாக மற்றும் அதன் பிரகாரம் தேறிய சொத்துக்கள் மாற்றல் கூற்றில் இறுதி மீதியை நிதிநிலைமை கூற்றுடன் சீராக்குதல் எதிர்வரும் ஆண்டு முதல் சரிசெய்ய நடவடிக்கை | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க கணக்குகள் தயாரிக்கபட வேண்டும். |

| | | |
|---|---|---|
| மீதி மற்றும் நிதி நிலைமைக்கூற்றில் அத்திகதியில் மீதி சமப்படாததுடன் 2021 ஒப்பீட்டு ரீதியான தகவல்கள் நிரலிலும் கடந்த ஆண்டிற்கான ரூபா 601,420 ஆன சீராக்கங்கள் நிதி நிலைமை கூற்றின் முகப்பில் மேற்கொண்டிருப்பதன் மீது ஆரம்ப மீதி சமப்படாதிருந்தது. இவ்வாறு கடந்த ஆண்டிற்கான சீராக்கங்கள் நிதி நிலைமைக் கூற்றின் முகப்பில் சீராக்கம் செய்வது கணக்கீட்டு நியமத்திற்கு இணங்கவில்லை என அவதானிக்கப்பட்டது. | எடுப்பதாக. | |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 9,060,958 ஆன மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 17,670,638 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 8,609,680 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இவ் வீழ்ச்சிக்கு கடந்த ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டினுள் தேநீர் மற்றும் உயிர்வாயுவிற்காக மேற்கொள்ளப்பட்ட செலவு முறையே ரூபா 6,372,409 மற்றும் ரூபா 1,144,688 இனால் அதிகரித்திருந்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறமையின்மை

| | கணக்காய்வ அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அலுவலர்களுக்கு வீட்டுக் கடன் வழங்கும் நோக்கில் நிதியத்திற்கு அவ்வப் போது பொது திறைசேரியினால் வழங்கியுள்ள பணம், அரச ஈட்டு முதலீட்டு வங்கியில் வைப்புச் செய்து வீட்டுக் கடன் நிதியமொன்று உருவாக்கப்பட்டிருந்ததுடன் 2022 திசெம்பர் 31 திகதி அதன் திரண்ட மீதி ரூபா 40,137,313 ஆக இருந்தது. எவ்வாறாயினும் 2011 மே மாதம் முதல் மீளாய்வாண்டு இறுதி வரை தசாப்பத்திற்கு அதிக காலமாக அலுவலர்களுக்கு கடன் வழங்கியிருக்காததுடன், மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி அறவிட வேண்டியதாகவுள்ள வீட்டுக் கடன் மீதி ரூபா 5,670,837 ஆன தொகையொன்று அதாவது வைப்புத் பெறுமதியின் 14 சதவீதம் மாத்திரம் ஆனது. எஞ்சிய ரூபா 34,466,476 ஆன வைப்பு அளவையும் கடனாக வழங்கும் இயலுமை இருக்கையில் மற்றும் கடன் தொகை அலுவலரின் சம்பளத்திலிருந்து அறவிடப்படும் பின்னனியில் கடன் திரும்ப | பதில் வழங்கப்படவில்லை | கடன் நிதியம் உருவாக்கப்பட்டதன் நோக்கத்தை அடைந்து கொள்ள தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அறவிடப்படாத அபாயம் மிகக் குறைந்த நிலையில் காணப்படும் போது, திணைக்களம் வீட்டுக் கடன் வழங்க நடவடிக்கை எடுத்திருக்கவல்லை. அதன் பிரகாரம் அரச திரண்ட நிதியத்திலிருந்து உள்நாட்டு இறைவரி அலுவலர்களின் நலன்புரிக்காக வழங்கப்பட்ட நிதியம் அந் நோக்கத்திற்காக பயன்படுத்துவதற்குப் பதிலாக பல ஆண்டுகளாக அரச ஈட்டு முதலீட்டு வங்கியில் நிறுத்தி வைத்திருந்ததன் மீது வங்கிக்காக அந் நிதியம் மாற்று மூலங்களில் முதலீடு செய்வதனூடாக நலன்களை ஈட்டிக் கொள்ள இடமளிக்கப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | மேற் குறித்த கணக்காய்வு அவதானிப்பு 2021 கணக்காய்வு அறிக்கையிலும் எழுப்பப்பட்டிருந்ததுடன் அதற்கு திணைக்கள தலைவரினால் வழங்கியுள்ள பதிலாக தற்போது வழங்கியுள்ள கடன் தொகையை முற்றாக அறவிடும் வரை புதிய கடன் வழங்க முடியாது எனவும் வைப்பிற்கு கிடைக்கும் வட்டி கடன் வழங்க போதாது எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், வீட்டுக் கடன் நிதியத்தை உருவாக்கும் போது வங்கியுடன் செய்து கொண்ட ஒப்பந்தம் பிரகாரம் கடன் வழங்க போதிய மீதியொன்று காணப்படுவதாக கணக்காய்வினால் அவதானிக்கப்பட்டது. மேலும் கடன் பெற்றுக் கொண்ட அலுவலர்களின் ரூபா 5,670,837 ஆன கடனை அறவிட்டு முடிவடைய 8 ஆண்டுகளிற்கு அதிக காலம் செல்வதால் அனைத்து கடன்களும் மீண்டும் அறவிடப்படும் வரை கடன் வழங்காத காரணத்தால் வீட்டுக் கடன் நிதியத்தை உருவாக்கிய நோக்கம் தொடர்ந்தும் அடையப்படுவதில்லை என கணக்காய்வினால் அவதானிக்கப்பட்டது. | பதில் வழங்கப்படவில்லை | கடன் நிதியம் உருவாக்கப்பட்டதன் நோக்கத்தை அடைந்து கொள்ள தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | உள்நாட்டு இறைவரி சேவையின் மற்றும் உள்நாட்டு இறைவரி திணைக்கள நிரந்தர சேவையிலுள்ள அலுவலர்களுக்கு வீடொன்று/ காணியொன்று கொள்வனவு செய்ய அல்லது வீட்டுத் திருத்தமொன்றிற்கு 5 சதவீதம் வட்டி விகிதத்தில் முறையே ரூபா 1,000,000 மற்றும் ரூபா 500,000 உச்சமட்டத்தின் கீழ் வீட்டுக் கடன் வழங்கும் நோக்கில் உருவாக்கியிருந்த மேற்குறித்த நிதியத்தில் 2022 ஆண்டில் ரூபா 38,977,949 ஆன ஆரம்ப மீதிக்காக | பதில் வழங்கப்படவில்லை | கடன் நிதியம் உருவாக்கப்பட்டதன் நோக்கத்தை அடைந்து கொள்ள தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கிடைத்த வட்டி ரூபா 1,159,364 ஆனதில் வட்டி சதவீதம் 2.97 சதவீதம் அளவு குறைந்தபட்ச அளவை கொண்டிருந்தது. அவ்வாறே ஊக்குவிப்பு நிதியத்திற்குறிய மொத்த சொத்துக்களின் பெறுமதியில் 16 சதவீத அளவு கடன் வைப்புக் கணக்கொன்றில் நிறுத்தி வைத்துள்ளதால் கடன் நிதியத்தின் நோக்கம் அடையப் பெறாததனை போன்றே பயனுள்ள முதலீடொன்றில் முதலீடு செய்வதனால் திணைக்களத்திற்கு அதிக நலன்களை ஈட்டிக் கொள்ளும் இயலுமையும் இழக்கப்பட்டிருந்தது. | | |
| (ஈ) | 1989 ஏப்ரல் 10 திகதிய உள்நாட்டு இறைவரி திணைக்களம் மற்றும் அரச ஈட்டு முதலீட்டு வங்கியினால் கைச்சாத்திட்ட உடன்படிக்கையில் உள்ளடங்கும் கடன் அளவுகள் மற்றும் செலவு மீதிக்காக வட்டி தொடர்பான நிபந்தனைகள் நிகழ்கால நிதிச் சந்தை நிலைமைகள் மற்றும் கடன் கொள்கையுடன் இணங்காததால் வீட்டுக் கடன் நிதியம் தொடர்ந்து செயற்படாமை தொடர்பில் தாக்கம் செலுத்தியுள்ளதாகவும் இதன் காரணமாக குறித்த உடன்படிக்கையின் நிபந்தனைகளை மீளாய்விற்குற்படுத்தும் தேவைப்பாட்டின் பக்கம் திணைக்களத்தின் கவனம் செலுத்தப்பட வேண்டுமெனவும் அவதானிக்கப்பட்டது. | பதில் வழங்கப்படவில்லை | கடன் நிதியம் உருவாக்கப்பட்டதன் நோக்கத்தை அடைந்து கொள்ள தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |